1968 மார்ச் 26]

செஞ்சிக்கோட்டை

*329 வின.—திரு. ரா. ரா. முனுசாமி: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிங்குராஜனல் கட்டப்பட்டு இப்பொழுது பழுதடைந்த நிலையில் இருக்கும் செஞ்சிக் கோட்டையைப் பழுது பார்க்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசிலனையி லுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) செஞ்சிக் கோட்டையும், அக் கோட்டைக்குள் இருக்கும் பிற வரலாற்று நினைவுச் சின்னங்களும், இந்திய அரசாங்கத்தின், இந்திய தொல் பொருள் ஆராய்ச்சித் துறையின் பாதுகாப்பில் உள்ளன. அவை அத் துறையினல் "பாதுகாக்கப்படும் நினைவுச் சின்ன" மாகப் பேணி வரப்படுகின்றன. கோட்டையும், அதனுள் இருக்கும் பிற நினைவுச் சின்னங்களும் நல்ல நிலைமையில் இருப்பதாகவும், அதனல் உடனடியாகப் பாதுகாப்பு வேலை எதுவும் மேற்கொள்ளத் தேவை இல்லை எனவும், அவசியமான வேலைகள் எல்லாம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளன வென்றும் தேவையில்லாத செடி கொடிகளை அவ்வப்பொழுது களைந் தெறிதல் போன்ற பேணுதல் வேலைகளே மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அத் துறையின் கண்காணிப்புத் தொல்பொருட் கலைஞர் அறிவித்துள்ளார்.

(இ) இக் கேள்வி எழவில்லை.

திரு. கா. வேழவேந்தன்: திகைப்பூட்டும் மலைச்சரிவிலுள்ள இந்தக் கலை அழகுள்ள கோட்டையை மத்திய அரசு இதுவரையில் டாக்குமென்டரி படமாக எடுத்து இந்தியா முழுவதும் காட்டவில்லை. இதை மத்திய அரசுக்குத் தமிழக அரசு சிபார்சு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பல கோட்டைகளை எடுக்கும்போது இதை எடுக்காமல் விட்டிருப்பார்களா என்ற ஐயப்பாடு இருக்கிறது. அதுபற்றிய விவரங்கள் இல்லை. அப்படி எடுக்கப்படாமல் இருக்குமானல் இந்த அரசு சிபார்சு செய்யலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தேசிங்குராஜன் கோட்டையைப் போன்று வரலாற்றுப் புகழ் கொண்ட எவ்வளவு கோட்டைகள் தமிழ்நாட்டில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன? காஞ்சிபுரத்தில் பல்லவமேடு என்றிருக்கிறது. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அங்குள்ள அகழியைத் தோண்டி அங்குள்ள பழைய கால வரலாற்றுச் சின்னங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்த முயற்சி எடுக்கப்படுமா?

1968 மார்ச் 26]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: எவ்வளவு கோட்டைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்ற விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரலாம். பல்லவமேடு பற்றிச் சொன்னார்கள். தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பல இடங்களை ஆராய்ந்து கொண்டு வருகிறார்கள். இதுபற்றி ஏற்கனவே ஆராய்ந்திருக்கிறார்கள். எந்த அளவிற்கு ஆராய்ந்தார்கள், என்ன முடிவுகள் காணப்பட்டன. மேலும், ஆராயப்பட வேண்டிய நிலை இருக்கிறதா இல்லையா என்பதுபற்றிய விவரக் குறிப்புகளை அறிந்த பிறகுதான் சொல்லமுடியும். தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: செஞ்சிக்கோட்டை பற்றி மட்டும் கேள்வி கேட்கவேண்டும். பல்லவமேடு போன்றவை பற்றிக் கேட்கக் கூடாது.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி: செஞ்சிக்கோட்டை மிகவும் அதிகமான உயரத்தில் இருப்பதால் அங்கு போகக்கூடிய பார்வையாளர்கள் அங்கு போய்ச் சேரமுடியாமல் இருப்பதால் அங்கு ஒரு ரோப் வே அமைக்க இந்த அரசு சிபார்சு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அப்படிப்பட்ட யோசனை இப்போது இல்லை. பெரும்பாலும் நடந்து போய்ப் பார்த்துவிட்டு வருவதுதான் அழகாக இருக்கிறது. ரோப்வேயில் போவது அவ்வளவு அழகாகயிருக்காது.

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, இந்த செஞ்சிக்
மு. ப. 9–30 கோட்டை பாதுகாப்புப்பற்றி மேற்கொண்டு அதிகமான மானியம் வழங்குவது, 1965-ல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்து அதிகச் சேதம் ஏற்பட்ட பிறகு நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, மேற்கொண்டு அபிவிருத்தித் திட்டங்களை அங்கு மேற்கொள்ளவில்லை என்று தெரிகிறது. அதை மாற்றி மேற்கொண்டு அதிகமான நிதி ஒதுக்கி இப்படிப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள இந்த அரசு மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்து உள்ளதா, அல்லது இனிமேல் செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்தக் கோட்டைப் பாதுகாப்பின் முழுப் பொறுப்பையும் இந்திய அரசாங்க இந்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறை பார்த்துக் கொண்டிருக்கிறது. அவர்களிடம் எழுதிக் கேட்ட நோக்கில் அதற்காக வேண்டிய பழுதுகள் எல்லாம் பார்த்து முடிந்திருப்பதாகவும் தேவையில்லாத சிலபல செடிகொடிகளை அவ்வப்போது களைந்து எறிய வேண்டிய நிலை இருப்பதாகவும்தான் செயற் குறிப்பு வந்திருக்கிறது. அப்படிக் கவனிக்கப்படாத சூழ்நிலை இருந்தால் மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சரவர்களின் வேண்டுகோளின்படி வினாக்கள் 330, 331, 332 ஒத்திவைக்கப்படுகின்றன.